# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், கரூர்.

**<u>முன்னிலை:-</u>** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 23 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள், திங்கள்கிழமை,

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 551/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-007563-2024 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரிகள் பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தாந்தோணிமலை காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண். 694/2021<br><br>எதிரிகளின் மீது இ.த.ச. 392 ஆவது பிரிவின் கீழ்.<br><br>// எதிரிகள் //<br>1. பாஸ்கர்(எ)பேய் பாஸ்கர்,<br>த/பெ. கருப்பசாமி,<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>பால்பண்ணை நிறுத்தம்,<br>அன்புநகர்,<br>வடக்கு காந்திகிராமம்,<br>கரூர் மாவட்டம்.<br><br>2. சபரிஹரன்,<br>த/பெ பாஸ்கர்,<br>99, நல்லப்பன் நகர்,<br>1 வது குறுக்கு,<br>சணப்பிரட்டி,<br>எஸ். வெள்ளாளப்பட்டி(அஞ்சல்),<br>தொழிற்பேட்டை,<br>கரூர் மாவட்டம்.(இவ்வழக்கின் தாய் வழக்கான CC 86/2022 ல் A1 எதிரியின் மீது நீண்ட நாட்களாக பிடியாணை நிலுவையில் இருப்பதால் இவ்வழக்கின் A2 எதிரிக்காக மட்டும் இவ்வழக்கானது CC 551/2024 ஆக தனியாக பிரிக்கப்பட்டுள்ளது) |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 06.10.2021 |

<table>
<tr><td>4)</td><td>முறையிட்ட நாள்</td><td></td><td>07.10.2021</td></tr>
<tr><td>5)</td><td>முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள்</td><td></td><td>18.10.2021</td></tr>
<tr><td>6)</td><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td></td><td>A2-29.01.2022</td></tr>
<tr><td>7)</td><td>எதிரி முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள்</td><td></td><td>A2 – 02.02.2022</td></tr>
<tr><td>8)</td><td>எதிரி பிணையில் விடப்பட்ட நாள்</td><td></td><td>A2- 28.09.2022</td></tr>
<tr><td>9)</td><td>எதிரி காவலில் இருந்த நாட்கள்</td><td></td><td>A2 - 02.02.2022 – 28.09.2022</td></tr>
<tr><td>10)</td><td>குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td></td><td>09.10.2024</td></tr>
<tr><td>11)</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td>திரு. தண்டபாணி,</td></tr>
<tr><td>12)</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>திரு. ரவி,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரியிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>11.05.2022</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரியின் மீது இ.த.ச. 392 ஆவது பிரிவின் கீழ்</td></tr>
<tr><td>15)</td><td>எதிரியின் பதில்</td><td></td><td>எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>
<table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1.</td><td>05.07.2023</td><td>05.07.2023</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>05.07.2023</td><td>05.07.2023</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>05.07.2023</td><td>05.07.2023</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>05.07.2023</td><td>05.07.2023</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>12.01.2024</td><td>12.01.2024</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>24.06.2024</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | அ.சா.8 02.03.2026 02.03.2026 |
| 17) | அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து) | | இல்லை |
| 18) | எதிரி கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள் | | 05.03.2026 |
| 19) | தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள் | | ஒருவருமில்லை. |
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 18.11.2024 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 30.03.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரி குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 06.04.2026 |

# தீர்ப்புரை

1) கடந்த 06.10.2021 ம் தேதி மாலை 18.50 மணிக்கு தாந்தோணிமலை காவல்நிலைய சரகம் திண்டுக்கல்-கரூர் நெடுஞ்சாலை சுக்காலியூர் மேம்பாலத்தில் இவ்வழக்கின் வாதி N.காந்திமதி புத்தாம்பூரில் உள்ள அவரது தோட்டத்திற்கு சென்று தோட்ட வேலையை செய்தும் ஆடு மாடுகளை மேய்த்து அடைத்துவிட்டு மீண்டும் கரூரில் உள்ள வீட்டிற்கு வருவதற்காக இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது அதே நெடுஞ்சாலையில் வாதிக்கு பின்னால் இருந்து வாகனத்தில் வந்த இவ்வழக்கின் எதிரிகள் A1 பாஸ்கர்(எ)பேய் பாஸ்கர் A2 சபரிஹரன் ஆகியோர் வாதி காந்திமதி என்பவரின் கழுத்தில் அணிந்திருந்த 7 ½ பவுன் தங்க தாலி செயினை பின்னால் உட்கார்ந்திருந்தவர் பிடித்து இழுத்து பறித்தபோது வாதி செயினை கையால் பிடித்துக்கொண்டதில் மீதி பாதி செயினும், தாலி, குண்டுகளைப் பறித்து எதிரிகள் தாங்கள் சுயலாபம் அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு வாதியின் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 4 பவுன் தங்க செயினைப் பறித்த தண்டிக்கத்தக்க குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே இவ்வழக்கின் எதிரிகளின் செய்கையானது ச/பி 392 இ.த.ச படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாந்தோணிமலை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 694/2021 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண்.551/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் தாய் வழக்கான CC 86/2022 ல் A1 எதிரியின் மீது நீண்ட நாட்களாக பிடியாணை நிலுவையில் இருப்பதால் இவ்வழக்கின் A2 எதிரிக்காக மட்டும் இவ்வழக்கானது CC 551/2024 ஆக தனியாக பிரிக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-ஆவது பிரிவுபடி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார்கள். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரியின் மீது ச/பி 392 இ.த.ச ஆவது பிரிவுகளின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி

விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பு சான்று பொருள் ஒன்றும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-**</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1** தன் சாட்சியத்தில், "நான் கரூர் பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய தோட்டம் புத்தாம்புதுார் கிராமம், வடுகப்பட்டி ஊரில் உள்ளது. தினமும் எனது இருசக்கர வாகனத்தில் தோட்டத்திற்கு சென்றுவிட்டு மாலை வீட்டிற்கு வருவது வழக்கம். கடந்த 06.10.2021 ம் தேதி நான் எனது தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக மாலை 06.50 மணியளவில் சுக்காலியூர் மேம்பாலம் அருகில் வந்து கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் என் செயினைப் பிடித்து இழுத்தார்கள். எனக்கு பதட்டமானதால் நான் ஒருபக்கம் எனது செயினைப் பிடித்துக்கொண்டேன். அவர்கள் பாதி செயினுடன், தாலி, குண்டுமணியுடன் பிடுங்கி சென்றுவிட்டார்கள். நான் அவர்கள் இருவரையும் துரத்தி பார்த்தேன். என்னால் பிடிக்க முடியவில்லை. ஆஜர் எதிரிகள்தான் என் கழுத்தில் இருந்த தாலி செயினை பிடுங்கி சென்றார்கள். நான் என் வீட்டிற்கு தகவல் சொன்னேன். பிறகு மறுநாள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1**. பிறகு சுமார் ஒரு வருடம் கழித்து செயின் கிடைத்துவிட்டதாக சொல்லி போலிசார் நகைகளை அடையாளம் காட்ட வர சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். செயின், தாலி, குண்டுமணி ஆகியவற்றை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள நகைகள் என்னுடையதுதான். அந்த நகைகள் தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்று சென்ற நகைகள். **போட்டோவிலுள்ள தாலிசெயின், தாலி, குண்டுமணி ஆகியவை அ.சா.பொ.1**. போலிசார் என்னை விசாரித்தனர் " என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2** தனது சாட்சியத்தில்,“ நான் பாரதிநகர் கரூரில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். காந்திமதி எனது மனைவி ஆவார். கடந்த 06.10.2021 ம் தேதி மாலை 06.30 மணிக்கு சுக்காலியூர் மேம்பாலத்தில் எனது மனைவி வந்து கொண்டிருந்தபோது என் மனைவியின் செயினை இரண்டு நபர்கள் அறுத்து சென்றுவிட்டார்கள் என என் மனைவி எனக்கு தகவல் சொன்னார்கள். பிறகு நாங்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என் மனைவியிடமிருந்து பறித்து சென்ற பாதி செயின் கிடைத்துவிட்டது. நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து நகைகளை இடைக்காலப் பொறுப்பில் பெற்று சென்றோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3** தனது சாட்சியத்தில்,“நான் பாரதிநகர் கரூரில் குடியிருந்து வருகிறேன். நான் சாப்ட்வேரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். கடந்த 06.10.2021 ம் தேதி மாலை 06.30 மணிக்கு சுக்காலியூர் மேம்பாலத்தில் எனது அம்மா வந்து கொண்டிருந்தபோது என் அம்மாவின் செயினை இரண்டு நபர்கள் அறுத்து சென்றுவிட்டார்கள் என என் அம்மா எனக்கு தகவல் சொன்னார்கள். பிறகு நாங்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என் அம்மாவிடமிருந்து பறித்து சென்ற பாதி செயின் கிடைத்துவிட்டது. நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து நகைகளை இடைக்காலப் பொறுப்பில் பெற்று சென்றோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4** தனது சாட்சியத்தில், “நான் பெரியகோதூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 07.10.2021 ம் தேதி நான் எனது தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு செல்லும் வழியில் சுக்காலியூர் மேம்பாலம் அருகில் போலிசார் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. **அந்த பார்வைமகசர் அ.சா.ஆ.2**. நானும், என் அண்ணன் பழனிச்சாமி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்து கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

v) இவ்வழக்கில் **அ.சா.5** தனது சாட்சியத்தில், “நான் சின்னாண்டாங்கோவில்

தெருவில் குடியிருந்து கார்பெண்டர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது அல்ல. கைப்பற்றுதல்மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அல்ல. ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

vi) இவ்வழக்கில் **அ.சா.6** தனது சாட்சியத்தில், "நான் தற்போது பாலவிடுதி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2021ம் தேதி தாந்தோணிமலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது 12.30 மணியளவில் பாரதி நகரில் வசித்துவரும் நாகராஜன் மனைவி காந்திமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண்.694/2021, ச.பி 392 இதசவின் கீழ் வழக்குப் பதிவு செய்தேன். **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3.** வழக்கினை புலன் விசாரணைக்காக பொறுப்பு ஆய்வாளர் சிவகாமி அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்" என சாட்சியமளித்துள்ளார்.

vii) இவ்வழக்கில் **அ.சா.7** தனது சாட்சியத்தில், "நான் காதப்பாறை, அருகம்பாளையத்தில் குடியிருந்து இண்டிரியர் டெக்கரேசன் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

viii) இவ்வழக்கில் **அ.சா.8** தனது சாட்சியத்தில், "நான் தாந்தோணிமலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2021ம் தேதி தாந்தோணிமலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது நெப்போலியன், சிவசங்கரி, செந்தில்குமார் ஆகியோர்களின் கையெழுத்து எழுத்துநடை நன்கு பரிச்சயம் என்பதால் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.10.2021ம் தேதி 12.30 மணியளவில் உதவி ஆய்வாளர் மணிவாசகம் நிலையப் பொறுப்பில் இருந்தபோது காந்திமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண்.694/2021, ச.பி 392 இதசவின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கினை அப்போதைய காவல் ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முருகேசன், பழனிச்சாமி ஆகியோர்

முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4**. பின்பு சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவந்ததன்பேரில் எதிரிகளை தேடி வந்ததில் காவல் ஆய்வாளர் நெப்போலியன் வெங்கமேடு காவல்நிலைய குற்ற வழக்கில் ஈடுபட்டிருந்ததால் சம்பிரதாய கைது செய்து பின்னர் அவரை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து போலிஸ் காவலில் எடுத்து சாட்சிகள் வெங்கடேஷ், கோபிநாத் முன்னிலையில் விசாரித்தபோது தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி எடுத்து ஆஜர் செய்த ஒரு பவுன் செயினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். ஒப்புதல்வாக்குமூலத்தின்படி எதிரி எடுத்து ஆஜர் செய்த ஒரு பவுன் செயினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை அழைத்து சென்றால் எனது வீட்டின் முன்புறமுள்ள ஓட்டு தாழ்வாரத்தில் மஞ்சள்பையில் மறைத்து வைத்திருக்கும் நகைகளை எடுத்து ஆஜர் செய்கிறேன். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. அந்த கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.6.** பின்னர், காவல் ஆய்வாளர் சிவசங்கரி, சாட்சிகள் வெங்கடேஷ், கோபிநாத், உதவி ஆய்வாளர் மணிவாசகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், காவல் ஆய்வாளர் செந்தில்குமார் கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றிய வழக்குச் சொத்தைப் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.7**. இத்துடன் காவல் ஆய்வாளர் செந்தில்குமார் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு முடித்து கொள்ளப்பட்டது " என சாட்சியமளித்துள்ளார்.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது ச/பி 392 இ.த.ச ஆவது பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>**பிரச்சனைக்குரிய தீர்வு**</u>

9) அரசு தரப்பில், கடந்த 06.10.2021 ம் தேதி மாலை 18.50 மணிக்கு தாந்தோணிமலை காவல்நிலைய சரகம் திண்டுக்கல்-கரூர் நெடுஞ்சாலை சுக்காலியூர் மேம்பாலத்தில் இவ்வழக்கின் வாதி N.காந்திமதி புத்தாம்பூரில் உள்ள அவரது தோட்டத்திற்கு சென்று தோட்ட வேலையை செய்தும் ஆடு மாடுகளை மேய்த்து அடைத்துவிட்டு மீண்டும் கரூரில் உள்ள வீட்டிற்கு வருவதற்காக இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது அதே நெடுஞ்சாலையில் வாதிக்கு பின்னால் இருந்து வாகனத்தில் வந்த இவ்வழக்கின் எதிரிகள் A1 பாஸ்கர்(எ)பேய் பாஸ்கர், A2 சபரிஹரன் ஆகியோர் வாதி காந்திமதி என்பவரின் கழுத்தில் அணிந்திருந்த 7 ½ பவுன் தங்க தாலி செயினை பின்னால் உட்கார்ந்திருந்தவர் பிடித்து இழுத்து பறித்தபோது வாதி செயினை கையால் பிடித்துக்கொண்டதில் மீதி பாதி செயினும், தாலி, குண்டுகளைப் பறித்து எதிரிகள் தாங்கள் சுயலாபம் அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு வாதியின் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 4 பவுன் தங்க செயினைப் பறித்த தண்டிக்கத்தக்க குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே இவ்வழக்கின் எதிரிகளின் செய்கையானது ச/பி 392 இ.த.சவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாந்தோணிமலை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 694/2021 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள காந்திமதி என்பவர் நிகழ்வுநிலை புகார்தாரர் ஆவார். அவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், " கடந்த 06.10.2021 ம் தேதி நான் எனது தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக மாலை 06.50 மணியளவில் சுக்காலியூர் மேம்பாலம் அருகில் வந்து கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் என் செயினைப் பிடித்து இழுத்தார்கள். எனக்கு பதட்டமானதால் நான் ஒருபக்கம் எனது செயினைப்

பிடித்துக்கொண்டேன். அவர்கள் பாதி செயினுடன், தாலி, குண்டுமணியுடன் பிடுங்கி சென்றுவிட்டார்கள். நான் அவர்கள் இருவரையும் துரத்தி பார்த்தேன். என்னால் பிடிக்க முடியவில்லை. ஆஜர் எதிரிகள்தான் என் கழுத்தில் இருந்த தாலி செயினை பிடுங்கி சென்றார்கள். நான் என் வீட்டிற்கு தகவல் சொன்னேன். பிறகு மறுநாள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பிறகு சுமார் ஒரு வருடம் கழித்து செயின் கிடைத்துவிட்டதாக சொல்லி போலிசார் நகைகளை அடையாளம் காட்ட வர சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். செயின், தாலி, குண்டுமணி ஆகியவற்றை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன் " என்று கூறியுள்ளார்.

11) மேற்படி அ.சா.1 ன் சாட்சியத்தினை ஆராய்கையில்,கடந்த 06.10.2021 அன்று மாலை 06.50 மணியளவில் சுக்காலியூர் மேம்பாலம் அருகில் தனது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் அவரது கழுத்தில் இருந்த செயினை பறித்ததும் அப்போது அவர் செயினை பிடித்துக்கொண்டதால் பாதி செயினுடன் தாலி, குண்டுமணியுடன் பிடுங்கி சென்று விட்டதும் தெரியவருகிறது. மேலும் மேற்படி செயினை பறித்த இருவரையும் துரத்தி சென்றபோது அவர்களை பிடிக்க இயலவில்லை எனவும் ஆஜர் எதிரிகள் தான் தனது கழுத்தில் இருந்த செயினை பிடுங்கிய நபர்கள் என்று அடையாளம் காட்டியும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட நாகராஜ் என்பவர் அ.சா.1 ன் கணவர் ஆவார். அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட பிரேம்குமார் என்பவர் அ.சா.1 ன் மகன் ஆவார். மேற்படி இருவரும் அ.சா.1 மூலம் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவத்திற்கு மறுநாள் புகார் கொடுப்பதற்காக அ.சா.1 னுடன் காவல்நிலையம் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி இருவரது சாட்சியங்களிலிருந்தும் 06.10.2021 அன்று அ.சா.1 ன் கழுத்தில் இருந்த நகையை இருசக்கர வாகனத்தில் வந்த இருநபர்கள் பறித்து சென்றது உண்மை என்பதும் அதனை தொடர்ந்து மறுநாள் அ.சா.1 ஐ அழைத்துக்கொண்டு காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றதும் தெரியவருகிறது.

13) அ.சா.1 தனது முதல்விசாரணை சாட்சியத்தில், ஆஜர் எதிரிகள்தான் தன் கழுத்தில் இருந்த தாலி செயினைப் பறித்து சென்றவர்கள் என்று அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக அ.சா.1 ஐ தவிர வேறு

யாரையும் அரசுதரப்பில் முன்னிருத்தப்படவில்லை. இது சம்பந்தமாக அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவினை ஆராய்கையில், 06.10.2021ம் தேதி தோட்டத்திற்கு சென்றுவிட்டு மீண்டும் கரூரிலுள்ள எனது வீட்டுக்கு வருவதற்காக மாலை சுமார் 06.50 மணியளவில் திண்டுக்கல்-கரூர் நெடுஞ்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சுக்காலியூர் மேம்பாலத்தில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது அதே நெடுஞ்சாலையில் எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத இருவரில் பின்னால் உட்கார்ந்திருந்த நபர் தனது கழுத்தில் அணிந்திருந்த சுமார் 7 ½ பவுன் தங்க தாலிசெயினை இழுத்து பறித்தபோது நான் செயினை கையால் பிடித்தபோது அதில் பாதி செயினும், தாலி, குண்டு சுமார் 4 பவுனை அத்து சென்றுவிட்டனர். எனது நகையை பறித்து சென்ற அடையாளம் தெரியாத நபர்களை கண்டுபிடித்து எனது நகையை மீட்டு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி கூற்றிலிருந்து சம்பவத்தின்போது எதிரிகளை அடையாளம் பார்க்கவில்லை என்பதும் அடையாளம் தெரியாத நபர்கள் பறித்து சென்றதாகதான் குறிப்பிட்டுள்ளதும் தெரியவருகிறது. ஒருவேளை சம்பவத்தின்போது எதிரிகளை அடையாளம் பார்ந்திருந்தால் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய இரண்டுநபர்கள் என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பார். ஆனால் தனது புகார் மனுவில் அடையாளம் தெரியாத நபர்களை கண்டுபிடித்து நகைகளை மீட்டுத்தருமாறுதான் குறிப்பிட்டுள்ளார்.

14) மேற்படி, அ.சா.1 தனது குறுக்கு விசாரைணையில், புகார் மனுவில் தாந்தோணிமலை போலிசார் எழுதிக்கொடுத்ததாகவும் அதைதான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி கூற்றிலிருந்த புகாரிலுள்ள சங்கதிகள் அ.சா.1 சொல்லித்தான் போலிசாரால் எழுதப்பட்டது தெரியவருகிறது. மேற்படி நகைகளானது சுமார் ஒரு வருடம் கழித்து கிடைத்துவிட்டதாக போலிசார் கூறியதன் பேரில் காவல்நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டியதாகவும் அப்போது காவல்நிலையத்தில் எதிரிகள் இருந்ததாகவும் அ.சா.1 தனது முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளார். மேற்படி கூற்றிலிருந்து காவல்நிலையத்தில் இருந்த எதிரிகளை போலிசார்தான் நகையை பறித்த நபர்கள் என்று அடையாளம் காட்டியதும் அன்றையதினம்தான் அ.சா.1 எதிரிகளை பார்த்ததும் தெரியவருகிறது.

15) சம்பவம் நடந்தபோது அ.சா.1 எதிரிகள் இருவரையும் பார்க்கவில்லை. ஆனால் எதிரிகள்தான் அ.சா.1 யிடமிருந்து நகையை பறித்த நபர்கள் என்று அ.சா.1 க்கு அடையாளம் காட்டியுள்ளனர். இவ்வழக்கில் எதிரிகள்தான் நகையை பறித்த நபர்கள் என

உறுதியூட்டுவதற்கு நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை. இந்நிலையில் எதிரி தானாக முன்வந்து தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் எதிரியின் வீட்டின் முன்புறமுள்ள ஓட்டு தாழ்வாரத்தில் மஞ்சள் பையில் மறைத்து வைத்திருந்த கொள்ளையடிக்கப்பட்ட நகை கைப்பற்றப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூல சாட்சியங்களான அ.சா.5 வெங்கடேஷ் மற்றும் அ.சா.7 கோபிநாத் ஆகியோரின் சாட்சியங்கள் இவ்வழக்கினை தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

16) அ.சா.5 வெங்கடேஷ் மற்றும் அ.சா.7 கோபிநாத் ஆகியோர் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில், **"என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது அல்ல. கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது அல்ல. ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியாது"** என்றும் என்னுடன் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி கூற்றிலிருந்து முக்கிய சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகியோர் 1ம் எதிரியை தங்களுக்கு தெரியாது எனவும் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலுள்ள கையொப்பத்தை தங்களுடையது இல்லை என்று மறுத்துள்ளதால் உண்மையிலேயே எதிரி ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தாரா என்பதும் அ.சா.1ன் பறிபோன நகையானது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்பதில் சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

17) இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி சார்பாக விசாரிக்கப்பட்ட காவல்ஆய்வாளர் அ.சா.8 திரு. செல்வக்குமார், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியின் வீட்டின் முன்புறமுள்ள ஓட்டு தாழ்வாரத்தில் மஞ்சள் பையில் மறைத்து வைத்திருந்த நகையை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்தபோதிலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லாதநிலையில் எதிரி தங்கள் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்து அதன் அடிப்படையில் நகை கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளித்த முன்னிருந்தப்பட்ட சாட்சிகள் அவ்வாறு தங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்ததாகவோ நகை கைப்பற்றப்பட்டதாகவோ கூறாமல் பிறழ்சாட்சியம் ஆகியுள்ளநிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் உண்மைத்தன்மை கேள்விக்குறியான நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமாக உள்ளது என்றும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

18) முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான இ.த.ச.392 ன் படியான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19) இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 90/2022** ல் கண்டுள்ள **அ.சா.பொ.1** ஆன சுமார் 4 பவுன் எடையுள்ள அறுந்தநிலையில் உள்ள தாலிசெயின்-1, தங்க குண்டு-1, தங்க மாங்கல்யம்-1 ஆகியவற்றினை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும், மேல்முறையீட்டு காலக் கெடுவிற்குப் பின் பிணை முறி தானே ரத்தாகவும் உத்தரவிடப்படுகின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 06.04.2026 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.06 19:54:10 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1. | காந்திமதி |
| அ.சா.2 | நாகராஜன் |
| அ.சா.3 | பிரேம்குமார் |
| அ.சா.4 | முருகேசன் |
| அ.சா.5 | வெங்கடேஷ் |

| | |
|---|---|
| அ.சா.6 | திரு. மாணிக்கவாசகம், உதவி ஆய்வாளர் |
| அ.சா.7 | கோபிநாத் |
| அ.சா.8 | திரு. செல்வக்குமார், காவல் ஆய்வாளர் |

**அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல்மகசர் |
| அ.சா.ஆ.7 | படிவம் 91 |

**அரசுதரப்பு சான்று பொருள் :-**

| | |
|---|---|
| **அ.சா.பொ.1** | சுமார் 4 பவுன் எடையுள்ள அறுந்தநிலையில் உள்ள தாலிசெயின்-1, தங்க குண்டு-1, தங்க மாங்கல்யம்-1(**ஆர்.பி.எண்.** 90/2022) |

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள் :-**

**இல்லை**

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.06 19:54:21 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

06.04.2026

**சிசி.எண்.** 551/2024

எதிரி ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.

முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான இ.த.ச.392 ன் படியான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண்.** 90/2022 ல் கண்டுள்ள அ.சா.பொ.1 ஆன சுமார் 4 பவுன் எடையுள்ள அறுந்தநிலையில் உள்ள தாலிசெயின்-1, தங்க குண்டு-1, தங்க மாங்கல்யம்-1 ஆகியவற்றினை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும், மேல்முறையீட்டு காலக் கெடுவிற்குப் பின் பிணை முறி தானே ரத்தாகவும் உத்தரவிடப்படுகின்றது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.06 19:54:35 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**